# කාර්යසාධන වාර්තාව
# செயலாற்றுகைஅறிக்கை
# Performance Report

# 2012

**ජාතික ක්‍රමසම්පාදන දෙපාර්තමේන්තුව – මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය**

**தேசியதிட்டமிடல் திணைக்களம - நிதிதிட்டமிடல் அமைச்சு**

Department of National Planning – Ministry of Finance and Planning

## செயலாற்றுகை அறிக்கை – 2012

## தேசிய திட்டமிடல் திணைக்களம்


1. திணைக்களத்தின் தூரநோக்கு, செயற்பணி, செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் 3

2. திணைக்களத்தின் பிரிவுகள் மற்றும் அலகுகள் 4

3. துறைவாரியான செயலாற்றுகை

   3.1 விவசாயம், நீர்ப்பாசணம் மற்றும் காணி 5

   3.2 பொது வசதிகள் 9

   3.3 வீதிகள், துறைமுகங்கள் மற்றும் போக்குவரத்து, தகவல் தொழிநுட்பம், தபால் தொலைத் தொடர்புகள் 11

   3.4 கைத்தொழில்கள், வர்த்தகம் மற்றும் பெருந்தோட்டம் 13

   3.5 கலாசாரம், மதம், தேசிய ஒருமைப்பாடு, விளையாட்டு, வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி 15

   3.6 கல்வி மற்றும் சுகாதாரம் 17

   3.7 சுற்றாடல், தொழிநுட்பம் மற்றும் ஆராய்ச்சி, கடற்றொழில் மற்றும் சுற்றுலா 20

   3.8 பேரண்ட பொருளாதாரம், சமூக பாதுகாப்பு, தொழில் உறவுகள் மற்றும் சிறைச்சாலைகள் 24

   3.9 பொது முகாமைத்துவம் 27

4. தகவல் அபிவிருத்தி மையம் 28

5. மனிதவள அபிவிருத்தி மற்றும் பொது நிர்வாகம் 30

6. நிதி செயலாற்றுகை 38

## 01. திணைக்களத்தின் தூரநோக்கு, நோக்கம், செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்

**தூரநோக்கு**

இலங்கையை ஆசியாவின் அதிசயம் என்ற இலக்கை நோக்கி வழிநடத்தல்.

**செயற்பணி**

பொருத்தமான திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள், மற்றும் கருத்திட்டங்கள் என்பவற்றின் மீதான தேசிய வள ஒதுக்கங்களை உச்சப்படுத்தல், உலக தரத்திற்கு ஏற்ப திட்டமிடல் திறன்களை தொடர்ச்சியாக மேம்படுத்தி திட்டமிடலில் உயர் மட்டத்திலான தொழிர்சார் தகமையை பேணுவதினூடாக அரச மற்றும் தனியார் துறை பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவதற்கு கொள்கை அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்தல்.

**பிரதான தொழிற்பாடுகள்**

- நீண்ட மற்றும் நடுத்தர கால அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரித்தல்
- பேரண்டப் பொருளாதார வேலைச் சட்டகம் மற்றும் மூலோபாயங்களை அபிவிருத்தி செய்தல்
- பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகள் மூலோபாயங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை மீளாய்வு செய்தல்
- அமைச்சுக்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் சமர்பிக்கப்படும் அபிவிருத்தி கருத்திட்ட முன்மொழிவுகளை பரிசீலித்தல்
- மூலதன பாதீட்டைத் தயாரிப்பதற்கு அவசியமானதொரு சட்டரீதியான உள்ளீட்டை பெற்றுக்கொடுத்தல்
- கருத்திட்ட கோவையை தயாரித்தலும் மற்றும் மேம்படுத்தலும்
- அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதி அமைச்சரின் கருத்தை தயாரித்தல்
- தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு விசேடமாக பொறுப்புச்சாட்டப்படும் விடயங்களை நிறைவேற்றல்
- தேசிய பொருளாதார அபிவிருத்தி சபையின் செயலகமாக செயற்படல்

## 02. திணைக்களத்தின் துறைகள் மற்றும் பிரிவுகள்

தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் தொழிற்பாடுகளை சிறப்பாக செயற்படுத்தும் நோக்கில் இத்திணைக்களமானது பொருளாதாரத்தின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிய 9 துறைகளாகவும் அவை மேலும் 31 பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறையும் அத்துறையின் கீழ் வரும் அமைச்சுக்கள் திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் தொடர்பான கொள்கை உருவாக்கம், திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகள் உட்பட அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாகும்.

i. விவசாயம், நீர்ப்பாசணம் மற்றும் காணி
ii. பொது வசதிகள்
iii. வீதிகள், போக்குவரத்து, துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள், மற்றும் தகவல் தொழிநுட்பம் மற்றும் தொலைத்தொடர்புகள்
iv. கைத்தொழில்கள், வர்த்தகம், தொழிற்பயிற்சி மற்றும் பெருந்தோட்டம்
v. வீடமைப்பு, நகர அபிவிருத்தி, விளையாட்டு மற்றும் கலாசாரம் மற்றும் மதங்கள்
vi. கல்வி மற்றும் சுகாதாரம்
vii. சூழல், சுற்றுலா மற்றும் அணர்த்த முகாமை
viii. பேரண்டப் பொருளாதாரம், பிராந்திய அபிவிருத்தி மற்றும் சமூக பாதுகாப்பு
ix. பொது நிர்வாகம்

இதற்கு மேலதிகமாக திணைக்களத்தில் மேலும் 3 பிரிவுகள் ஏனைய தொழில்பாடுகளை கவனித்தன

- தகவல் அபிவிருத்திக்கான மத்திய நிலையம்
- நிர்வாகப்பிரிவு
- நிதிப்பிரிவு

## 3. துறைவாரியான செயலாற்றுகை

### 3.1 விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் காணி

**விவசாயம்**

விவசாயத்துறையே நாட்டின் 33 சதவீதமான வேலைப்படையின் பிரதானமான வாழ்வாதார மூலமாகும். இவர்கள் பெரும்பாலும் கிராமப்புரங்களில் மற்றும் பெருந்தோட்டங்களில் வாழ்கின்றனர். 2005 ஆம் ஆண்டில் மொ. உ. உ யில் 17.2 சதவீதமாகக் காணப்பட்ட விவசாயத்துறையின் பங்களிப்பானது கைத்தொழில்துறை மற்றும் சேவைத் துறையிலும் ஏற்பட்ட துரித வளர்ச்சியின் காரணமாக 2012 ஆம் ஆண்டில் 11.1 சதவீதமாகக் குறைந்துள்ளது. எவ்வாறாயினும் விவசாயத்துறையானது தொடர்ந்தும் நாட்டின் பொருளாதாரத்தின் அடிப்படையாக காணப்படும்.

அரசாங்கமானது 2012 ஆம் ஆண்டில் இத்துறை மீது ரூபா 64,348 மில்லியன்களை செலவு செய்துள்ளது. இதில் ரூபா 48,248 மில்லியன்கள் உர மானியமாகும். 2002 ஆம் ஆண்டின் ரூபா 3,949 மில்லியன் முதலீடுகளுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டில் உர மானியம் உட்பட விவசாய விரிவாக்கள் சேவைகளில் ரூபா 56,634 மில்லியன்களை அரசாங்கம் முதலீடு செய்துள்ளது. இதன் மூலம் அரசாங்கமானது விவசாயத்துறையில் ஈடுபடும் மக்களுக்கு மேம்படுத்தப்பட்ட மற்றும் தரமான சேவைகளை வழங்கி விவசாயத்துறையின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு முடிந்துள்ளது. உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து விவசாயப் பொருட்களின் இறக்குமதியை குறைக்கும் நோக்குடன் 2012 ஆம் ஆண்டில் அரசாங்கமானது ரூபா 3,574 மில்லியன்களை பயிர் உற்பத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் முதலீடு செய்துள்ளது. இது 2002 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பாரிய அதிகரிப்பாகும்.

**மேற்கொள்ளப்பட்ட விஷேட ஆய்வுகள்**

- உலக வங்கியினால் தயாரிக்கப்பட்ட ''இலங்கையில் நடைமுறையில் உள்ள விவசாயத்துறையின் மீதான ஊக்குவிப்பு வேலைச் சட்டகத்தின் வர்த்தக மற்றும் விலைக் கொள்கையின் தாக்கம்'' என்ற கொள்கை அறிக்கையை மீளாய்வு செய்து திறைசேரியின் செயலாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

**விஷேட நடவடிக்கைகள்**

- 2012 ஆம் ஆண்டு தேசத்திற்கு மகுடம் சூட்டல் (தெயட்ட கிருள) கண்காட்சியில் விநியோகிப்பதற்காக தயாரிக்கப்பட்ட துண்டுப் பிரசுரத்திற்கு விவசாயத்துறை தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொடுத்து அதனைப் பிரசுரிப்பதற்கான தொழிநுட்ப உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

- 2013 ஆம் ஆண்டில் தேசத்திற்கு மகுடம் சூட்டல் (தெயட்ட கிருள) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொலன்னறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் அமுல்படுத்தப்படவுள்ள விவசாயத்துறை அபிவிருத்தித் திட்டங்களை தயாரிப்பதற்கான தொழிநுட்ப உள்ளீடுகள் மற்றும் தகவல் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- நிதித் திட்டமிடல் அமைச்சின் 2011 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கைக்கான விவசாயத்துறை உப அத்தியாயத்தின் கீழ் ''வினைத்திறனாக வழிநடாத்தப்படும் விவசாயம்'' எனும் அறிக்கை தயாரிக்கப்பட்டது.
- வரிசை அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 33 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அவதானிப்புக்கள் தேசிய வரவுசெலவுத்

திட்டத் திணைக்களம், மற்றும் வெளிநாட்டு வளத்திணைக்களம் என்பவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- விவசாய அமைச்சு மற்றும் கமநல சேவைகள் மற்றும் வனஜீவராசிகள் அமைச்சினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 23 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதி திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- வரண்ட வலய வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் பங்பற்றல் நிகழ்ச்சித்திட்டத்துடன் வழிநடாத்தல் குழுக் கூட்டம் மற்றும் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் மற்றும் கொள்கை மீளாய்வுக் கூட்டங்களில் பங்குபற்றின.

**கால்நடைத்துறை**

கால்நடைத்துறையானது பிரதானமாக பால் பண்ணைத்துறை மற்றும் கோழிப் பண்ணைத்துறை ஆகிய உப துறைகளை உள்ளடக்கியதாகும். 2012 ஆம் ஆண்டில் இத்துறை மீதான மொத்த முதலீடுகள் ரூபா 2,544 மில்லியன்களாகும். இதில் ரூபா 2,105 மில்லியன்கள் உள்நாட்டு மிருகங்களின் இனவிருத்தியை மேம்படுத்தல், விலங்கியல் நோய்களை கட்டுப்படுத்தல், விரிவாக்கல் சேவைகளை மேம்படுத்தல் மற்றும் கிராமிய மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தல் என்பவற்றின் மீதான மூலதனச் செலவாகும். கால்நடைத்துறையின் நடவடிக்கைகளானது கால்நடை அபிவிருத்தி மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சரினால் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், தேசிய கால்நடை அபிவிருத்தி சபை மற்றும் வரையறுத்த மில்கோ தனியார் நிறுவனம் என்பவற்றின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டது.

**விஷேட நிகழ்ச்சிகள்**

- ''இலங்கையில் கால்நடை அபிவிருத்தியை துரிதப்படுத்தும் முகமாக சேவை வழங்கல் முறையை உறுதிப்படுத்துவதற்காக வேண்டி மிருக உற்பத்தி மற்றும் சுகாதார அலகுகளை உருவாக்குதல்'' என்ற அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைவாக மாகாண மட்டத்தில் மேலதிகமாக தேவைப்படும் ஆளணியினரை மதிப்பீடு செய்வதற்கான குழுக் கூட்டங்களில் பங்குபற்றி அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கான அறிக்கை தயாரிப்பதில் பங்குபற்றியது.

- நிதித்திட்டமிடல் அமைச்சின் 2011 ஆம் ஆண்டின் ஆண்டு அறிக்கையின் 8 ஆம் அத்தியாயமான ''அரச செலவினம் மற்றும் கொள்கை மீளாய்வு'' பகுதிக்கு ''கால்நடை உற்பத்திகளில் தன்னிறைவு'' என்ற தலைப்பில் கால்நடைத்துறை உப தலைப்பு தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

- அவுஸ்திரேலியாவில் இருந்து 500 உயர்தர பசுக்களை இறக்குமதி செய்வது தொடர்பில் கால்நடைகள் மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சுக்கு அவசியமான தொழிநுட்ப உதவிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

- கால்நடைகள் மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 15 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டது.

**நீர்ப்பாசணம் மற்றும் காணி**

2012 ஆம் ஆண்டில் நீர்ப்பாசணத் துறை மீதான மொத்த செலவுகள் ரூபா 33 பில்லியன்களாகும். இதில் ரூபா 30 பில்லியன்கள் மூலதனச் செலவுகளாகும். இது 2002 ஆம் ஆண்டின் முதலீடுகளுடன் ஒப்பிடுகையில் 13 சதவீதம் அதிகமானதாகும். 2006 – 2012 ஆம்

ஆண்டு காலப்பகுதியில் ஒரு குறிப்பிடும்படியான அளவு பொது முதலீடுகள் இத்துறை மீது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றில் பிரதானமாக புதிய நீர்த் தேக்கங்கள் நிர்மாணித்தல் (ரூபா 50 பில்லியன்கள்) நீர்ப்பாசண முறைமைகளை புணரமைத்தலில் (ரூபா 30 பில்லியன்கள்) நீர் முகாமை, நீர்ப்பாசண முறைமைகளின் செயற்பாடு மற்றும் பராமரித்தல் என்பவற்றில் (ரூபா 12 பில்லியன்கள்) மற்றும் சாத்தியதி வள ஆய்வு மற்றும் ஆராய்ச்சிகளின் மீது (ரூபா 4.5 பில்லியன்கள்) உள்ளடங்கியதாகும்.

2012 இல் காணி அபிவிருத்திதுறை மீதான மொத்தச் செலவினம் ரூபா 4,651 மில்லியன்களாகும். அதில் ரூபா 2,235 மில்லியன்கள் மூலதனச் செலவினமாகும். காணி உரித்து வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் மீது ஒரு பாரிய அளவிலான முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிம்சவிய (ரூபா 417 மில்லியன்), அரச தேவைகளுக்காக காணி சுவீகரிப்பு (ரூபா 1,285 மில்லியன்) சுனாமி பிந்திய அபிவிருத்திக்காக காணிச் சுவீகரிப்பு (ரூபா 321 மில்லியன்) மற்றும் ஏனைய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக (ரூபா 212 மில்லியன்கள்) 2012 இல் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**விஷேட நிகழ்ச்சிகள்**

- நிதித் திட்டமிடல் அமைச்சின் 2011 ஆம் ஆண்டறிக்கையின் 8 ஆம் அத்தியாயமான ‘அரச செலவினமும் கொள்கை மீளாய்வும்’ என்ற தலைப்பின் கீழ் நீர்ப்பாசனத்துறை உப தலைப்பின் கீழ் ‘‘நீர் முகாமைத்துவத்திற்கு நீர்ப்பாசணம்’’ என்ற தலைப்பிலும் மற்றும் நீர்ப்பாசணம் - நீருக்கான கேள்வியை பூர்த்தி செய்தல் என்ற தலைப்பிலான பெட்டி அறிக்கையும் தயாரிக்கப்பட்டது.

- 2012 தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் விநியோகிப்பதற்காக துண்டுப் பிரசுரத்திற்கான நீர்ப்பாசண உபதுறை தொடர்பிலான உள்ளூர் மற்றும் தகவல் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- 2013 ஆம் ஆண்டின் தேசத்திற்கு மகுடம் கண்காட்சியின் கீழ் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கான நீர்ப்பாசண அபிவிருத்தித் திட்டங்களை தயாரிப்பதற்கான தொழிநுட்ப உள்ளீடுகள் மற்றும் தகவல் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- ‘‘வரட்சி – 2012’’ என்ற தலைப்பில் விவசாயத்துறை மீதான தாக்கம் மதிப்பீடு செய்யப்பட்டு நீர்த்தேக்கங்கள் மற்றும் குளங்களின் சேமிக்கக்கூடிய நீரின் கொள்ளளவை அதிகரிக்கும் வகையில் அவற்றை மண் படிவுகளை அகற்றி ஆளமாக்குதல் மற்றும் சிறிய குளங்களை புனரமைத்து நீர் கொள்ளளவை அதிகரிப்பதற்கான ‘‘வரட்சி நிவாரணம் வழங்கல், மற்றும் வரட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான துரித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்’’ தயாரிக்கப்பட்டது.

- கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் பரிந்துறைக்கப்பட்ட சிபாரிசுகளுக்கு அமுல்படுத்தும் நோக்கில் சமர்ப்பிக்கப்பட்ட 07 நீர்ப்பாசண கருத்திட்டங்கள் மற்றும் 03 காணி அபிவிருத்தி கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களம் என்பவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- நீர்ப்பாசணம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 14 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- காணி மற்றும் அபிவிருத்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 03 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சின் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் மூலங்கள் திட்டமிடல் கருத்திட்டத்தின் கீழ் ஆற்றுப்படுக்கை அபிவிருத்தி தொடர்பான பிரதான திட்டத்தை தயாரிப்பதற்கான தொழிநுட்ப உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- மொரகஹகந்த மற்றும் கலுகங்கை நீர்த்தேக்க அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் முகாமைத்திட்டம் என்பவற்றின் வழிநடாத்தல் குழுக் கூட்டம் மற்றும் முன்னேற்ற மீளாய்வு மற்றும் கொள்கை மீளாய்வு கூட்டங்களில் கலந்துகொண்டமை.

## 3.2 பொது வசதிகள்

**நீர் வழங்கல்:** அரசாங்கத்தின் பிரதான நோக்கமாவது 2020 ஆம் ஆண்டளவில் அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பாக குடிநீரை சமமான அடிப்படையில் நிலைபேறாக பெற்றுக் கொடுப்பதாகும். பாதுகாப்பான குடிநீர் கிடைப்பனவை உறுதி செய்வதென்பது மனிதனின் அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்வதாகும் என்பதை அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளது. இந்த சூழ்நிலையில் அரசாங்கமானது 100 சதவீதம் பாதுகாப்பான குடிநீரை நாடு பூராகவும் பெற்றுக் கொடுப்பதற்கு மும்முனைவான உபாயங்களை பின்பற்றுகின்றது. முதலாவது உபாயமானது மெற்றோ நகரங்கள், பிரதான நகரங்கள் மற்றும் அதிக சனத்தொகையைக் கொண்ட புதிதாக வளர்ச்சியடைந்து வரும் நகரங்களுக்கு பாரிய அளவிலான நீர் வழங்கள் திட்டங்களின் மூலம் 100 சதவீத குழாய் நீர் விநியோகத்தை பெற்றுக் கொடுத்தல். இரண்டாவது உபாயமானது கிராமங்களுக்கு சமூக நீர் வழங்கள் திட்டங்கள் மூலமாக பாதுகாப்பான குழாய் நீரைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் மூன்றாவது உபாயமானது தனிப்பட்ட கிணறுகள் மற்றும் ஏனைய மூலங்கள் மூலம் பாதுகாப்பான குடிநீரைப் பெற்றுக்கொள்வதை தொடர்ச்சியான குடிநீர் தரத்தை பரிசோதனை செய்து உறுதிப்படுத்துவதன் மூலமாக பாதுகாப்பான குடிநீர் பாசணத்தை உறுதி செய்வதாகும்.

**மின்சாரம் மற்றும் எரிபொருள்:** இத்துறையின் நீண்ட இலக்கானது, எண்ணெய் அகழ்வு மற்றும் மாற்று எரிபொருள்களான சூரிய சக்தி மற்றும் காற்றின் மூலமான மின்சாரம் போன்றவற்றினூடாக சக்தி வளத் தேவையில் தன்னிரைவை அடைவதாகும். இத்துறையின் குறுகிய கால குறிக்கோளானது, மின்கட்டமைப்பு விரிவாக்கம் மற்றும் கட்டமைப்புக்கு வெளியிலான தீர்வுகள் மூலம் நாட்டிலுள்ள அனைத்து குடியிருப்புக்களுக்கும் மின் வசதியினைப் பெற்றுக் கொடுப்பதாகும். இறுதியாக இலங்கையானது இப்பிராந்தியத்தின் சக்திவளத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு சக்தி வள மையமாக உருவாகும். இது நாட்டின் துறைமுக வலயமைப்பு மற்றும் சர்வதேச வியாபார வலயமைப்பினூடாக உறுதிப்படுத்தப்படுகின்றது. அதிகரித்து வரும் மின்சாரத்திற்கான கேள்வியானது மறபு ரீதியற்ற மீள்புதுப்பிக்கக்கூடிய சக்தி வளங்களையும் உள்ளடக்கியதாக குறைந்த செலவிலான வினைத்திறனான மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணிப்பதனூடாக பூர்த்தி செய்யப்படும். மின் வழங்களின் நிலைபேற்றுத்தன்மை மற்றும் நம்பகமானது பல்வேறுபட்ட சக்தி மூலங்களின் கலவையினூடாக மேம்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்படும். அதேபோல முறைமை இழப்புக்களை மிகவும் குறைந்த மட்டத்தில் வைத்துக்கொள்ளும் வகையில் சக்தி வளப் பாதுகாப்பு மற்றும் சக்தி வள முகாமைக்கு சமமான அடிப்படையில் முக்கியத்துவம் அளிக்கப்படும்.

**விஷேட நிகழ்ச்சிகள்**

- 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 18 கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- அமைச்சரவையினால் சமர்ப்பிக்கப்பட்ட 11 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நதித்திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.
- 30 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித்திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பை தயாரிப்பதற்காக ஏனைய திணைக்களங்களுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.
- நிதித்திட்டமிடல் அமைச்சின் 2011 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கைக்கான அத்தியாயம் தயாரிக்கப்பட்டது.
- அரச பொது முதலீட்டு திட்டத்தின் பொது வசதிகள் அத்தியாயம் தயாரிக்கப்பட்டது.
- பின்வரும் கூட்டங்களில் பங்குபற்றியுள்ளது.

- மின்சக்தி எரிபொருள் அமைச்சு மற்றும் நீர் வழங்கள் வடிகாலமைப்பு அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றின் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களில் பங்குபற்றியது.
- நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு துறையில் காணப்படும் பிரச்சினைகள் பற்றிய கலந்துறையாடல் கூட்டங்களில் பங்குபற்றியது.
- பல்நோக்கு நீர்த்தேக்கங்கள் நிர்மாணித்தல் தொடர்பான கூட்டம்.
- தேசிய சமூக நீர் வழங்கள் நிதியத்தின் கூட்டம்.
- சக்தி வளப் பாதுகாப்பை அடைந்துகொள்வதற்கான வழிகாட்டல் வரைபடத்திற்கான அமைச்சுக்களுக்கிடையிலான சிரேஷ்ட அதிகாரிகளின் குழுக் கூட்டம்.

## 3.3 வீதி அபிவிருத்தி, துறைமுகங்கள், விமான சேவைகள், தகவல் தொழிநுட்பம, தபால் மற்றும் தொலைத் தொடர்பு

**வீதிகள்:** நாட்டின் வீதி வலைப்பின்னலானது நாட்டின் போக்குவரத்தில் 9.5 சத வீதத்தை கையாளும் அதேவேலை நாட்டின் சமூக நலன், உற்பத்தித்திறன் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் பிரதான பங்காளராகவும் காணப்படுகின்றது. நாட்டின் வீதி வலையமைப்பினை தொடர்ந்து பராமரிப்பதற்கும் மற்றும் உலகலாவிய தரத்தை பேணும் வகையில் உட்கட்டமைப் வசதிகளை நவீனமயமாக்குதல் மற்றும் புதிதாக உருவாகி வரும் தேவைகளை பூரத்தி செய்யக்கூடிய வகையில் வசதிகளை ஊக்குவிக்கும் வகையிலும் குறிப்பிடும் படியான முதலீடுகள் உறுதிப்படுத்தப்பட்டு வீதித் துறையானது உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கின்றது.

**துறைமுகங்கள்:** துறைமுகத் துறையானது பொருளாதார வளர்ச்சிக்கு பிரதான பங்களிப்புச் செய்யும் ஒரு துறையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. தற்போது நாட்டில் கொழும்பு, ஹம்பாந்தோட்டை ஆகிய இரண்டு சர்வதேச துறைமுகங்களும் மற்றும் காலி, ஒலுவில், திருகோணமலை, காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறை துறைமுகங்கள் ஐந்தும் பிராந்திய துறைமுகங்களாகவும் காணப்படுகின்றன.

இலங்கைத் துறைமுகங்கள் வருடாந்தம் 4.3 மில்லியன் இருபது அடி கொல்களன்களை கையாள்வதோடு நாட்டின் பொருளாதார விரிவாக்கலில் பாரிய தாக்கத்தையும் செலுத்துகின்றது.

**விமான சேவைகள்:** இலங்கை விமான சேவைத் துறையின் நீண்டகால கேள்வி தன்மையானது எப்போதும் சாதகமாகவே காணப்படுகின்ற அதே வேலை அது மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்புடன் அதுவும் அதிகரித்தே செல்கின்றது. இலங்கை அரசாங்கத்தின் இலக்கான இலங்கையை பிராந்தியத்தின் விமான சேவைகள் மையமாக மாற்றியமைக்கும் நோக்கில் அரசாங்கம் பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையம், மத்தலை மகிந்த ராஜபக்ஷ விமான நிலையம் மற்றும் 13 உள்ளூர் விமான நிலையங்களிலும் குறிப்பிடும்படியான அபிவிருத்திகளை செய்து வருகின்றது. விமானப் போக்குவரத்தில் ஏற்படும் முன்னேற்றமானது அதனுடன் தொடர்புபட்ட விமானங்கள் பராமரிப்பு, பழுதுபார்த்தல், மீள் கட்டுதல், எண்ணெய் வழங்குதல் மற்றும் உணவு வழங்குதல் போன்றவற்றிற்கான கேள்வியை உருவாக்கும். இவை நாட்டில் ஒரு வினைத்திறனான விமான சேவைகள் கைத்தொழிலை உருவாக்குவதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுக்கும்.

- உரிய வரிசை அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 51 புதிய கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- வீதிகள், போக்குவரத்து மற்றும் தகவல் தொழிநுட்பதுறைக்கான கருத்திட்ட முன்மொழிவுகளின் இருப்பானது தயாரிக்கப்பட்டது.
- உரிய கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்களை தயாரிப்பதில் உரிய வரிசை அமைச்சுக்களுக்கு அவசியமான தொழிநுட்ப உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
- 2013 – 2016 காலப்பகுதிக்கான பொது முதலீட்டுத் திட்டத்தின் வீதிகள் மற்றும் தேசிய பாதைகள், துறைமுகம், விமானத்துறை போக்குவரத்து மற்றும் தகவல் தொழிநுட்ப அத்தியாயம் தயாரிக்கப்பட்டது.
- 2014 – 2016 காலப்பகுதிக்கான பிரதான முன்னுரிமை பகுதிக்கான அபிவிருத்தி வெளியீடு குறிக்காட்டிகள் தயாரிக்கப்பட்டன.
- 2013 – 2016 காலப்பகுதிக்கான பொது முதலீட்டு அட்டவணை தயாரிக்கப்பட்டது.
- 63 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- பெருந்தெருக்கள் மற்றும் துறைமுகங்கள் அமைச்சு - 33
- போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சு - 8
- தொலைத்தொடர்புகள், தகவல் தொழிநுட்பம் மற்றும் தபால் தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொடர்பாடல் அமைச்சு – 8

**விஷேட ஒப்படைகள்**

- 2012 "தேசத்திற்கு மகுடம்" நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஆவனம் தயாரிக்கப்பட்டது.
- நிதித் திட்டமிடல் அமைச்சின் 2011 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையைத் தயாரிப்பதற்கான உள்ளீடுகள் வழங்கப்பட்ட.
- 2012 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கைக்கான வீதிகள், போக்குவரத்து மற்றும் தொலைத் தொடர்பு குறைகளின் உப அத்தியாயங்கள் தயாரிக்கப்பட்டன.

### 3.4 கைத்தொழில்கள், வர்த்தகம் மற்றும் பெருந்தோட்டம்

**கைத்தொழில் மற்றும் வர்த்தகம்**

இக்காலப்பகுதியில் கைத்தொழில்துறைக்கு ஏதுவான கொள்கை பின்பற்றப்பட்டமையினால் 2012 ஆம் ஆண்டில் மொத்த தேசிய உற்பத்தியில் கைத்தொழில் துறையின் பங்களிப்பானது 30.4 சதவீதமாக அதிகரித்தது. இது 2011 அம் ஆண்டில் 29.3 சதவீதமாகும். கைத்தொழில் துறைக்கு சாதகமான வரிக்க கட்டமைப்பு, பிராந்திய அடிப்படையிலான கைத்தொழில் வலயங்கள், வரிச் சலுகைகள், ஏற்றுமதி நோக்காகக் கொண்ட ஊக்குவிப்புக்களின் அறிமுகம், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான தொழிநுட்ப மற்றும் நிதி ரீதியான ஆதரவுகள் வழங்கப்பட்டமை அவற்றில் சில முன்னெடுப்புகளாகும்.

**இத்துறையின் அடைவுகள் - 2012**

| கைத்தொழில் உற்பத்திகள் | ஏற்றுமதிப் பெறுமதி (ஐ.அ.டொ.மி) |
|---|---|
| பிடவை மற்றும் தைத்த ஆடைகள் | 3,965 |
| இறப்பர் முடிவுப் பொருட்கள் | 857 |
| டயமண்ட், இரத்திணக்கல் மற்றும் ஆபரணங்கள் | 559 |
| உணவு, குடிபாணங்கள் மற்றும் புகையிலை | 360 |

மூலம்: இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

**கைத்தொழில்துறை செயலாற்றுகை 2010 – 2012**

| வகை | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான பங்களிப்பு (ரூ. பில்லியன்) | 1,649.30 | 1,956.60 | 2,387.70 |
| மொத்த உள்நாட்டு உற்பத்திகள் சத வீதத்தில் | 28.70 | 29.30 | 30.40 |
| இத்துறையின் வளர்ச்சி வீதம் | 8.40 | 10.30 | 10.30 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 1.80 | 2.00 | 2.10 |
| மொத்த வேலைப்படையில் இத்துறையின் சத வீதம் | 24.60 | 24.10 | 26.10 |
| கைத்தொழில் ஏற்றுமதிகள் | 6,195.00 | 7,902.00 | 7,262.00 |
| மொத்த ஏற்றுமதியின் சத வீதத்தில் | 69.70 | 72.40 | 74.30 |
| உற்பத்தித்துறை மீதான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் வருகை | 159.70 | 322.40 | 307.66 |
| கைத்தொழில் இயலளவு பாவணை வீதம் | 82.00 | 83.00 | 84.00 |
| கைத்தொழில் துறையில் பெறுமதி சேர்ப்பு பெறுமதி (ரூ. பில்லியன்) | 916.00 | 1,084.00 | 1,233.00 |
| கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கீழுள்ள கைத்தொழில் வலயங்களின் எண்ணிக்கை | 27.00 | 25.00 | 26.00 |

**விஷேட நிகழ்ச்சிகள்**

- 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 18 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- கைத்தொழில் துறையுடன் சம்பந்தப்பட்ட 14 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.
- இலங்கையின் களி ஓடு உற்பத்தித்துறையின் தற்போதைய நிலை தொடர்பாக ஆராய்ந்து ஒரு உபாய ஆவனம் தயாரிப்பதற்கு அவசியமான தகவல்கள் திரட்டப்பட்டன.

- எப்பாவலை பொஸ்பேட் இருப்புக்களை பயன்படுத்தி அதி விஷேட சிறப்பு பொஸ்பேட் உற்பத்தி செய்வதற்கான சத்தியத்தன்மை தொடர்பாக திறைசேரி செயலாளருக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

- கைத்தொழில் வலயங்களில் தொழில் முயற்சியாளர்களுக்கு காணிகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் தற்போது பின்பற்றும் வழிமுறைகளை ஆராய்ந்து அதில் காணப்படும் காலதாமதங்களை குறைப்பதற்கு ஒரு பொறிமுறையை அடையாளம் காண்பது தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

- மருந்துப் பொருட்களின் உற்பத்திக்கு பிரத்தியேகமாக ஒரு கைத்தொழில் வலயம் ஒன்றை அமைப்பதற்கான ஆரம்ப கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

**பெருந்தோட்டம்**

பெருந்தோட்டத் துறையானது தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் ஏனைய ஏற்றுமதிப் பயிர்கள் பிரதான பங்கை வகிப்பதோடு அவைகள் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 2.6 சதவீத பங்களிப்பைச் செய்துள்ளதோடு 1.5 மில்லியன் நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புக்களையும் அளித்துள்ளது. இத்துறையின் நடவடிக்கைகள் பிரதானமாக பெருந்தோட்டக் கைத்தொழில்கள், சிறு பயிர்கள் ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சு மற்றும் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி ஆகிய மூன்று அமைச்சுகளினதும் பங்களிப்புடன் இடம்பெற்றது.

**விஷேட நிகழ்வுகள்**

- 18 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம், வெளிநாட்டு வளத் திணைக்களம் மற்றும் உரிய வரிசை நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

- பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு, சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு மற்றும் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு என்பவற்றினால் சமர்ப்பிக்கப்பட்ட 09 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- சிறு தோட்ட தொழில் முயற்சி அபிவிருத்திக் கருத்திட்டம் உட்பட வழிநடாத்தல் குழுக்கள் கூட்டங்கள் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் வரவு செலவுத்திட்ட கலந்துரையாடல்கள் மற்றும் கொள்கை மீளாய்வு கூட்டங்கள் உட்பட 15 கூட்டங்களில் கலந்து கொண்டுள்ளன.

- 2013 – 2015 காலப்பகுதிக்கான பெருந்தோட்டத்துறைக்கான பொது முதலீட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

- சிறிய ஏற்றுமதிப் பயிர்களின் விலைகளை மீளாய்வு செய்வதற்கான முன்மொழிவு மதிப்பீடு செய்யப்பட்டது.

- நிதித் திட்டமிடல் அமைச்சின் 2011 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையைத் தயாரிப்பதற்கான உள்ளீடுகள் வழங்கப்பட்டதோடு அத்தியாயம் 8.6.2 பகுதியும் தயாரிக்கப்பட்டது.

## 3.5 கலாசாரம், மதம், தேசிய மரபுகள், தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் விளையாட்டுத்துறை

இத்துறையானது கலாசார விவகாரம், தொல்பொருள், தேசிய நூதனசாலைகள், தேசிய சுவடிகள், பௌத்தம், இந்து, கிறிஸ்துவம் மற்றும் இஸ்லாம் மதங்கள், விளையாட்டு அபிவிருத்தி, தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு பகுதிகளை உள்ளடக்கியதாகும். இப்பகுதி பின்வரும் ஐந்து அமைச்சுக்களை உள்ளடக்கியது.

### விஷேட நிகழ்ச்சிகள்

- 18 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.
- 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 20 கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- 2012 – தேசத்திற்கு மகுடம் தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கான கைந்நூல் தயாரிப்பதற்கான உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
- 2012 – 2015 பொது முதலீட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.
- நிதித் திட்டமிடல் அமைச்சரின் 2011 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை தயாரிப்பதற்கான உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
- 2013 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட தயாரிப்புக்கு பங்களிப்பு செய்யப்பட்டது.
- தேசிய மும்மொழித் திட்டத்தை தயாரிப்பதில் பங்குபற்றியது.
- தேசிய விளையாட்டுக் கொள்கையை தயாரிப்பதற்கான தொழிநுட்ப உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
- இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணப்படும் பௌத்த விகாரைகள், இந்து ஆலயங்கள் மற்றும் கோட்டைகள் தொடர்பான ஒரு அறிக்கையை தயாரிப்பதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டதோடு அதில் பங்கும்பற்றியது.

### வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி

இப்பகுதியின் தொழிற்பாட்டுப் பிரிவுகளானது வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தியை உள்ளடக்கியதாகும். இத்தொழிற்பாடுகளானது பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் நிர்மானத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் அனுசரனையுடன் மேற்கொள்ளப்பட்டன.

‘‘மகிந்த சிந்தனை’’ அபிவிருத்தி வேலைச் சட்டகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை அடைந்து கொள்வதற்கு வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தித் துறையானது பல்வேறு வகைகளில் செயலாற்றியது. அரசாங்கத்தின் கொள்கையின்படி வீடமைப்புத் துறையானது நாட்டின் அனைத்த குடும்பங்களுக்கும் வாழ்விடத்தை உருதி செய்யும் அதேவேலை, தனியார் துறையினர் வீடமைப்புத் துறையில் முதலீடு செய்வதைத் தூண்டுவதற்கு அவசியமான சாதகமான சூழலையும் உருவாக்கியது. சிறப்பான முறையில் நகரங்களை அபிவிருத்தி செய்வது நகர அபிவிருத்தித் துறையின் பொறுப்பாகும்.

- உரிய அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 42 கருத்திட்ட முன்மொழிவுகளில் 34 கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம், வெளிநாட்டு வளத் திணைக்களம் மற்றும் உரிய நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

- பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் நிர்மாணத்துறை, பொருளியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 26 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டது.

- நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறையின் 2013 – 2015 மத்தியகால பொது முதலீட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

- நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இலங்கை காணிகள் மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத் தாபனம் ஆகியவற்றின் அடையாளம் காணப்பட்ட கருத்திட்டங்களை முன்னுரிமைப்படுத்தல் கூட்டங்கள் இடம்பெற்றன.

- குறைந்த வருமானம் பெருவோரின் வீட்டுப் பிரச்சினையை தீர்ப்பதற்காக 2012 வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட கருத்திட்டம அமுல்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல்.

- நிதித் திட்டமிடல் அமைச்சின் 2011 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கைக்கான 8.4.7 மற்றும் 8.5.6 ஆகிய அத்தியாயங்கள் தயாரிக்கப்பட்டன.

- ‘‘தேசத்திற்கு மகுடம்’’ நிகழ்ச்சித்திட்டத்திற்கு வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி தொடர்பான தகவல்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

## 3.6 கல்வி மற்றும் சுகாதாரம்

### சுகாதாரம்

அரசாங்கத்தின் சுகாதாரத் துறையின் நோக்கமானது, பிராந்திய ரீதியான வைத்தியசாலைகளின் உட்கட்டமைப்பு மற்றும் வைத்திய வசதிகளை மேம்படுத்தி சுகாதார சேவை வழங்கல் முறைமையை உறுதிப்படுத்துவதனூடாக சுகாதார சேவைகளின் கிடைப்பனவை அனைவருக்கும் சமமாகக் கிடைப்பதை உறுதி செய்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதாகும். சேவை வழங்கும் இடத்திலேயே இலவசமான நோயாளர் நோக்கிய சுகாதார சேவையை பெற்றுக் கொடுப்பதை நோக்காகக் கொண்டு நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சை அளிப்பு ஆகிய இரண்டு சுகாதார நல சேவைகளையும் ஆராய்ந்து சுகாதாரத் துறையின் பிரச்சினைகளைத் தீர்ப்பதாகும். அரசாங்கம் பிரதானமாக கவனம் செலுத்துவது தொற்றாத நோய்கள், தொற்றக்கூடிய நோய்கள் மற்றும் போசாக்கு பிரச்சினைகளினூடாக புதிதாக அதிகரித்து வரும் சிறப்பான சுகாதார நல சேவைகளுக்கான கேள்வியை சமாளிப்பதாகும். நாட்டிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளுக்கும் அவசியமான நவீன வைத்திய உபகரணங்கள், அம்பியூலன்ஸ் வண்டிகள், அனைத்து தேவையான மருந்துப் பொருட்கள் மற்றும் வைத்தியர்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் நாட்டில் உள்ள வைத்தியசாலைகளினால் பெற்றுக் கொடுக்கப்படும் வைத்திய சேவைகள் தொடர்பாக நாட்டு மக்கள் நம்பிக்கை கொள்வார்கள்.

### கல்வி

நாட்டின் கல்விக் கொள்கையானது மாணவர்கள் நவீன சமூகத்தில் உருவாகி வரும் சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையில் அவசியமான ஆழுமையையும் இயலுமைகளையும் வளர்த்துக்கொள்ளக் கூடிய வகையில் தரமான மற்றும் மாணவர் நட்பின் கல்வி முறைமை ஒன்றை உருவாக்குவதாகும். அதே வேலை உயர்கல்வித் துறையின் பாங்கானது நாட்டை குறைந்த வருமானத் தரத்தில் இருந்து நடுத்தர வருமான நாடாக உயர்த்துவதில் மிகவும் முக்கியமானதொரு பங்காற்றுகின்றது. நாட்டின் பல்கலைக்கழக முறைமையானது செயற்றிறனாகவும் வினைத்திறனாகவும் சேவையாற்றக் கூடிய மற்றும் நாட்டின் உருவாகி வரும் புதிய தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய ஆளுமையையுடைய பட்டதாரிகளை உருவாக்குதல் வேண்டும். அரசாங்கத்தின் இலக்கானது நாட்டின் அரச பல்கலைக்கழகங்களை உலக மட்டத்தில் உயர் தரத்தில் உள்ள பல்கலைக்கழகங்களின் தரத்திற்கு உயர்த்துவதாகும்.

- உரிய கொள்கைகள் மற்றும் உபாயங்களை தயாரிப்பதில் உரிய அமைச்சுக்களுக்கு தொழிநுட்ப உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
  - ✓ சுகாதாரத் துறைக்கான 2013 – 2017 காலப்பகுதிக்கான சுகாதார அபிவிருத்தித் திட்டத்தை தயாரித்தல் மற்றும் 2012 – 2016 கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் வேலைச் சட்டகத்தை தயாரிப்பதற்கு அவசியமான உதவிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
  - ✓ தேசிய குடியகழ்வு சுகாதார கொள்கையை அபிவிருத்தி செய்வதற்காக பங்களிப்புச் செய்தது.

- 2013 – 2016 காலப்பகுதிக்கான சுகாதாரம், கல்வி மற்றும் உயர்கல்வி துறைகளுக்கான பொது முதலீட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டது.

- 2013 – 2016 காலப்பகுதிக்கு இத்துறைகளுக்கான அபிவிருத்தி வெளியீட்டு குறிக்காட்டி முன்னுரிமை தேவைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது.
- 2013 – 2016 காலப்பகுதிக்கான பொது முதலீட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

- சுகாதார அமைச்சு, சுதேச வைத்தியத் துறை அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் உயர் கல்வி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- சுகாதாரத்துறையுடன் 33 மற்றும் கல்வித் துறையின் 26 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- சுகாதாரத் துறையின் புதிய 23 கருத்திட்டங்கள் மற்றும் கல்வி மற்றும் உயர் கல்வித் துறையின் 22 புதிய கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- கல்வி மற்றும் சுகாதாரத் துறைக்கான கருத்திட்ட இருப்பு தயாரிக்கப்பட்டது.

**அபிவிருத்தி கருத்திட்டங்களின் முன்னேற்ற மிளாய்வு**

சுகாதார மற்றும் கல்வி உயர்கல்வித் துறை அபிவிருத்தித் திட்டங்களின் செயலாற்றுகை மீளாய்வு.

- உரிய வழிநாத்தல் குழுக் கூட்டங்கள் மற்றும் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களில் பங்குபற்றியது.

- இத்துறையுடன் தொடர்புபட்ட தேசிய அளவிலான கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

- நிதித் திட்டமிடல் அமைச்சின் 2011 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கைகளின் கல்வி சுகாதார உப அத்தியாயங்கள் தயாரிக்கப்பட்டன.

**தொழிற் கல்வி**

நாட்டின் மனித வள அபிவிருத்தியில் தொழிற் கல்வியானது ஒரு முக்கிய பங்காற்றுகின்றது. அரசாங்கத்தின் தொலைநோக்கானது நாட்டின் அனைத்து இளைஞர்களுக்கும் தொழிற் கல்வியை பெற்றுக் கொள்வதற்கு சமமான சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுப்பதாகும்.

- இப்பிரிவின் கீழ் 51 கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு ரூபா 3,568.61 மில்லியன் பெறுமதியான 16 கருத்திட்டங்கள் அமுல்படுத்தலுக்கு சிபாரிசு செய்யப்பட்டன.

- இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 12 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நிதித் திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பு வழங்கப்பட்டது.

- 2013 – 2015 காலப் பகுதிக்கான தொழிற் கல்வித்துறைக்கான பொது முதலீட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

- 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் அமுல்படுத்தப்படும் தொழிற்கல்வி துறை அபிவிரத்தித்திட்டம் தொடர்பான பல கலந்துறையாடல்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. ஆசிய அபிவிருத்தி வங்கியானது ஐ.அ.டொ. 200 மில்லியன்களை இத்திட்டத்திற்கு வழங்கவுள்ளது.

- நாட்டில் தற்போது காணப்படும் தொழிற் கல்வி முறையில் ஒரு காத்திரமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தனியார்த் துறையின் பங்களிப்புடன் ஒரு திறன் அபிவிருத்தி உபாயத்தை உருவாக்குவதற்கு அபிவிருத்தி பங்காளர்களுடன் பல கலந்துறையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

- இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட கிளிநொச்சியில் ஸ்ரீ லங்கா ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவகம் அமைப்பது தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களில் பங்குபற்றியது.

- நிதித் திட்டமிடல் அமைச்சின் 2011 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை 4..3 அத்தியாயத்தை தயாரிப்பதற்கான உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- தொழிற் கல்வித் துறை தொடர்பான தகவல்கள் ‘‘தேசத்திற்கு மகுடம்’’ நிகழ்ச்சித் திட்டத்திற்காகப் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

## 3.7 சூழல், தொழிநுட்பம் மற்றும் ஆராய்ச்சி, மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறை

### சூழல்

சூழல் துறையின் கொள்கை இலக்காவது எதிர்கால சந்ததியினருக்கு இயற்கை மரபுரிமைகளை பெற்றுக் கொடுப்பதை நோக்காகக் கொண்ட காணி, தாவரங்கள், மற்றும் விலங்குகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடிய நிலைபேறான அபிவிருத்தியை ஊக்குவிப்பதாகும். நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியில் சூழல் பாதுகாப்பானது ஒரு முக்கிய பங்காற்றுகின்றது. கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்யும்போது 2012 ஆம் ஆண்டில் காடு அழிப்பு, வளி மற்றும் நீர் மாசடைதல், சீதோஷ்ன மாற்றம், நிலம் வளமற்றுப் போதல், யானை மனித மோதல் மற்றும் கடல் அறிப்பு போன்ற பிரதான பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டன.

### தொழிநுட்பம் மற்றும் ஆராய்ச்சி

தொழிநுட்பம் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தியை உலக தரத்திற்கு அபிவிருத்தி செய்வதே அரசாங்கத்தின் பிரதான இலக்குகளில் ஒன்றாகும். உயர் தொழிநுட்பத்திலான கைத்தொழில் மயமாக்கம் நாட்டை துரித பொருளாதார அபிவிருத்தியை நோக்கி வழிநடாத்திச் செல்லும் உள்ளூர் நிறுவனங்களின் உற்பத்திகளின் தரம், உற்பத்தித்திறன், மற்றும் போட்டித் தன்மையை மேம்படுத்தும் நோக்கில் நாட்டில் உயர் தொழிநுட்ப கைத்தொழிலை ஊக்குவிப்பதற்கு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. உயர் தொழிநுட்பத் துறையில் ஆராய்ச்சி அபிவிருத்தி, விஷேடமாக நனோ தொழிநுட்பம் மற்றும் உயிர் தொழிநுட்பம் என்பன உணவு பதனிடல், டிசூ கல்சர் மற்றும் பசளை உற்பத்தி போன்ற பல கைத்தொழில்களுக்கு பெறுமதி சேர்ந்துள்ளது.

### காடுகள்

தற்போது நாட்டின் மொத்தமாக 1.95 மில்லியன் ஹெக்டயார பரப்பானது காடுகளினால் சூழப்பட்டுள்ளது. இது மொத்த நிலப்பரப்பில் 28 சத வீதமாகும். வனவளத் திணைக்களத்தினால் முகாமை செய்யப்படும். காடுகளின் அளவு அண்ணளவாக 1.2 மில்லியன் ஹெக்டயார்களாகும். மிகுதி 0.75 மில்லியன் ஹெக்டயார் காடுகளும் வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் பராமரிக்கப்படுகின்றது. விவசாயத்திற்காக காடுகளை அத்துமீறி உடமையாக்கிக் கொள்ளுதல், சேனைப் பயிர்ச் செய்கைக்காக காடுகளை வெட்டுதல் மற்றும் தீயிடல், களவாக மரங்களை வெட்டுதல், காட்டுத் தீ, மாடு மேய்ச்சல் என்பவற்றின் காரணமாக காடுகளின் வளமும் குன்றி வருகின்றது. குறைந்து வரும் வன வளத்தினை மீள் நடுகை, வனங்களை புனரமைத்தல் என்பவற்றினூடாக இளப்பீடு செய்வதனூடாகவும் அதேவேளை காடுகள் மேலும் அழிவதை தடுப்பதற்கு மற்றும் கட்டுப்படுத்துவதற்கு அவசியமான பாதுகாப்பு நடவடிக்கைகளை தற்போதுள்ள காடுகளில் அமுல்படுத்துவதனூடாகவும் பேணலாம்.

### வன விலங்குப் பாதுகாப்பு

நாட்டிற்கே உரித்தான வன விலங்கினங்கள் அழிந்து வருகின்றமை இலங்கை எதிர்நோக்கும் பிரதான ஒரு பிரச்சினையாகும். வன ஜீவராசிகள் பாதுகாப்பு மற்றும் உயிரினங்களின் முகாமையில் மிகவும் முன்னுரிமை அளிக்கப்படல். விடயம் யாதெனில் உலகில் காணப்படும் மிகவும் பல்வகைப்படுத்தப்பட்ட சுற்றுச் சூழலை பாதுகாப்பதே வன ஜீவராசிகளையும் மற்றும் பூமியை அமைதியான வழியில் பேணுவதற்கான உபாயமாகும். நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 13 சத வீதம் வன ஜீவராசிகளின் இருப்பிடங்களாக பாதுகாக்கப்பட்டுள்ளது. இலங்கையில் வன ஜீவராசிகள் துறையில் காணப்படும் ஒரு பிரதான பிரச்சினை யாதெனில் யானை – மனித மோதலாகும். நாட்டில் அமுல்படுத்தப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களின் காரணமாக யானைகள் தமது இருப்பிடங்களை இழப்பதனால் யானைகள் முடிவற்ற யானை – மனித மோதல் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

**கடலோரப் பாதுகாப்பு**

இலங்கையில் கரையோர வலயம் என்பது சராசரி நீர்மட்ட உயரத்திலிருந்து 300 மீற்றர் நிலப்பகுதிக்கு உட்பட்ட பிரதேசமாகும். இதற்கு நிலையாகவும் மற்றும் காலத்திற்கு காலம் கடலுடன் தொடர்புபட்டிருக்கும் ஆறுகள், ஓடைகள், களப்புக்கள் ஏனைய நீர்நிலைகளும் உள்ளடங்கும். நாட்டின் கடல் வலயத்தின் நீலம் 1,585 கிலோ மீற்றர்களாகும். இத மணல் கடற்கரை, கழிமுகங்கள், களப்புக்கள், கடல் தாவர படுக்கைகள், சுண்ணாம்புக்கல் பாறைகள், சதுப்பு நிலங்கள், கண்டல் தாவரங்கள் மற்றும் மணல் மேடுகளை உள்ளடக்கியதாகும். சனத்தொகை பெருக்கமானது இலங்கை கடற்கரை வளங்கள் மீது ஒரு தாக்கத்தை செலுத்தியுள்ளதோடு ஒரு கரையோர சூழலில் பல மாற்றங்களை உருவாக்கியுள்ளது. கைத்தொழில் அபிவிருத்தி, கடற்கரையை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் திறந்த பொருளாதாரக் கொள்கைகள் கரையோரச் சூழல் மாசடைதல் மற்றும் கரையோரத்துடன் தொடர்புபட்ட பிரச்சினைககளுக்கும் காரணமாகியுள்ளன.

**விஷேட நிகழ்ச்சிகள்**

